**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029475

1. District மாவட்டம்: TRICHY PS: காவல்நிலையம்: VIGILANCE AND Year: ஆண்டு: 2016 FIR No.: மு.த.அ. எண்: 05/16 Date: நாள்: 24.10.2016

2. (i) Act சட்டம்: PREVENTION ANTI CORRUPTION Sections பிரிவுகள்: 7 of the PC Act 1988

(ii) Act சட்டம்: OF CORRUPTION ACT 1988 Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 24.10.2016 Date to : நாள் வரை 11.00

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2016 Time : நேரம் 13.00

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக WRITTEN (COMPUTERISED)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் ABOUT 4 KM NORTH WEST OFFICE OF THE Senior REGIONAL Manager TASMAC Trichy

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G BARATHI (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் GOBALAN

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 19.02.1970 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் TASMAC Supervisor (g) Address : முகவரி NO. 22 Devadhanam Trichy

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

ACCD : Tr Saravanan TASMAC District Manager (Flying Squad) and PA to TASMAC Senior Regional manager Trichy.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- NO DELAY

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

கனம் திருச்சி சிறப்பு நீதிபதி (ஊழல் தடுப்பு சட்டம் 1988) நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 24.10.2016 மதியம் 13.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருச்சி, மேலதேவதானம் தெருவை சேர்ந்த கோபாலன் மகன் திரு.பாரதி என்பவர் கொடுத்த புகார்மனுவை பெற்று, அந்த மனுவை மின்னஞ்சல் மூலம், சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகத்திற்கு அனுப்பி, அந்த புகார் குறித்து, முதல் கட்ட விசாரணை செய்ய, அனுமதி பெற்றும், புகார் மனுவில் கூறப்பட்டுள்ள, திருச்சி, டாஸ்மாக் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகத்தில் பறக்கும்படை மாவட்ட மேலாளர் / முதுநிலை மண்டல மேலாளரின் நேர்முக உதவியாளர் ஆக பணிபுரியும் திரு.சாவணன் மற்றும் மனுதாரர் திரு.பாரதி மற்றும் அவருடன் வந்த திரு.சரவணகுமார் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி முதல்நிலை விசாரணை செய்தும், எதிரி பணம் கையூட்டாக கேட்டுள்ளதை உறுதிபடுத்த, புகார்மனுதாரர் மற்றும் அவருடன் வந்த திரு.சாவணகுமார் ஆகியோரை மீண்டும் சென்று, எதிரியை சந்திக்குமாறு அறிவுரை கொடுத்தும், அவர்களுக்கிடையே நடைபெறும் உரையாடலை பதிவு செய்வதற்காக, தலைமைக்காவலர் 739 திரு.ரெங்கநாதனை உடன் அனுப்பி, உரையாடலை பதிவு செய்தும், அதை கேட்டதில், புகார்மனுவில் கூறப்பட்டிருந்தபடி, புகார்மனுதாரர்களிடம், எதிரி திரு.சாவணன், கையூட்டாக பணம் கேட்டுள்ளார் என்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தெரியவந்தது.

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு 24/10/2016

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(V. Hemalatha)

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை .......................... No எண் ..........

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.08/2016ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......

ஆகையால் புகார்தாரரின், புகார்மனுவின் பேரில் வழக்கு பதிவு செய்ய, காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தென் சரகம், சென்னை அவர்களின் அனுமதி பெற்று, இன்று 24.10.2016 ஆம் தேதி, பிற்பகல் 15.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குற்ற எண்.08/2016 சட்ட பிரிவு 7 ஊழல் தடுப்புச் சட்டம் 1988–ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் கோ.பாரதி, த/பெ.கோபாலன், கடை மேற்பார்வையாளர், டாஸ்மாக் கடை எண்.10559, பெட்டவாய்தலை, திருச்சி மாவட்டம். வீட்டு முகவரி எண்.22, மேலதேவதானம் தெரு, திருச்சி–2.பெறுநர் லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, திருச்சி. ஐயா,நான் திருச்சி, மேலதேவதான தெருவில் எனது குடும்பத்துடன் வசித்துவருகிறேன். நான் திருச்சி மாவட்டம், பெட்டவாய்தலையில் உள்ள டாஸ்மாக் அரசு மதுபான கடை எண்.10559ல் கடை மேற்பார்வையாளராக பணியாற்றி வருகிறேன். இந்த கடையில் விற்பனையாளர்களாக திரு.சரவணகுமார் மற்றும் திரு.பரமசிவம் ஆகியோர் பணிபுரிகின்றனர். கடந்த 22.10.2016 சனிக்கிழமை மதியம் சுமார் 2 மணியளவில் நான் மதிய சாப்பாட்டிற்காக கடையிலிருந்து வெளியில் சென்றிருந்த போது, கடையில் விற்பனையாளர் திரு.சரவணகுமார் பொறுப்பில் இருந்தார். அப்போது, மதியம் 3 மணியளவில் திருச்சி, டாஸ்மாக் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகத்திலிருந்து பறக்கும்படை மாவட்ட மேலாளர் என்றும், தன் பெயர் சரவணன் என்றும் விற்பனையாளர் திரு.சரவணகுமாரிடம் அறிமுகம் செய்து கொண்டு, மாதாமாதம் மாமூலாக எல்லா டாஸ்மாக் கடைகளிலிருந்தும் 500/– ரூபாய் கரைக்டா கொடுக்கும்போது, உங்க கடையிலிருந்து மட்டும் சரியா கொடுக்கமாட்டேங்கிரீங்க என்று சொல்லியுள்ளார். அப்போது விற்பனையாளர் திரு.சரவணகுமார் அவரிடம், சூப்பர்வைசர் சாப்பிட போயிருக்கார், அவர் வந்ததும் கேட்டுக்குங்க சார் என்று சொல்லியுள்ளார். அதற்கு பறக்கும்படை மாவட்ட மேலாளர் திரு.சரவணன் அவரிடம், உங்கிட்ட கேட்டா, சூப்பர்வைசரிடம் கேளுங்கன்னு எங்கிட்டேயே சொல்றியா என்றும், என்னையே எதிர்த்து பேசுகிறாயா என்றும் சொல்லிவிட்டு, ஒரு வெள்ளைத் தாளில் எதுவும் எழுதாமல், அதன் அடியில் வற்புறுத்தி விற்பனையாளர் திரு.சரவணகுமாரிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டு, சூப்பர்வைசரை கூட்டிக்கிட்டு, திங்கள்கிழமை திருச்சி அலுவலத்திற்கு வா என்றும், அப்படி வராட்டி உங்க இரண்டு பேரையும் சஸ்பென்ட் செய்யச் சொல்லி ரீஜினல் மேனேஜருக்கு ரிப்போர்ட் எழுதிருவேன் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டாதாக, நான் சாப்பிட்டு வந்த பிறகு விற்பனையாளர் திரு.சரவணகுமார் என்னிடம் சொன்னார். அதன்படி நானும், விற்பனையாளர் திரு.சரவணகுமாரும், இன்று 24.10.2016 காலை 11 மணி சுமாருக்கு திருச்சி, டாஸ்மாக் முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகத்திற்கு சென்று, அங்கு பறக்கும்படை மாவட்ட மேலாளர் திரு.சரவணன் அவர்களை சந்தித்து விபரம் சொன்னோம். அப்போது, பறக்கும்படை மாவட்ட மேலாளர் திரு.சரவணன் என்னிடம், நீங்கதான் பெட்டவாய்தலை சூப்பர்வைசரா, சனிக்கிழமை நான் வரும்போது நீங்க எங்கே போயிருந்தீங்க, அதிகாரிங்க வந்தா உங்க சேல்ஸ்மேன்களுக்கு மரியாதை கொடுக்க தெரியாதா, ஒழுங்கா மாதாமாதம் எங்களுக்கு கொடுக்கிற 500 ரூபாய் பணத்த நீங்க கொடுக்காததாலதான் நான் கேட்டேன், அத கேட்டதற்கு கூட, சூப்பர்வைசர கேட்டுக்குங்க என்று தெனாவட்டா மரியாதை

இல்லாம உங்க சேல்ஸ்மேன் சொல்றார் என்று சரவணகுமாரை பார்த்தவாறு என்னிடம் சொன்னார். அதற்கு நான் அவரிடம், சார், நான் போனமாசம் தான் சார் இந்த கடைக்கு வந்துள்ளேன். நாங்க வேற சைடு வருமானம் எதுவும் பாக்கிறதில்லைசார். அதனாலதான் சேல்ஸ்மேன் உங்ககிட்ட அன்னைக்கு அதுமாதிரி பேசியிருப்பார். இதெல்லாம் மனசில வச்சிகாதிங்க சார் என்று சொன்னேன். அப்போது பறக்கும்படை மாவட்ட மேலாளர் திரு.சரவணன் என்னிடம், நான் பறக்கும்படை டி.எம். மட்டும் இல்லை. ரீஜினல் மேனேஜருக்கு பி.ஏ.வும் நான்தான், அந்த பேப்பர்ல உங்க இரண்டு பேர் மேலேயும் ரிப்போர்ட் எழுதினா, உங்க ரெண்டு பேர் வேலையும் காலியாகிவிடும். நான் உங்க மேல ரிப்போர்ட் போடாம இருக்கனும்னா, நீங்க 2000 ரூபாயும், உங்க சேல்ஸ்மேன் சரவணகுமாருக்கு 5000 ரூபாயுமா சேர்த்து மொத்தம் 7000 ரூபா எனக்கு தனியா கொடுத்திருங்க என்று சொன்னார். அதற்கு நானும், விற்பனையார் திரு.சரவணகுமாரும் அவரிடம், நாங்க எந்த தப்பும் பண்ணாம இருக்கும்போது, எங்கமேலே எதுக்குசார் ரிப்போர்ட் போடுறீங்க, எங்க வேலைக்கு எந்த பிரச்சனையும் பண்ணிறாதீங்கசார் என்று கேட்டோம். அப்போது பறக்கும்படை மாவட்ட மேலாளர் திரு.சரவணன் என்னிடம், நீங்க 7000 ரூவா பணத்தை கொடுக்கலேனா, நான் உங்க இரண்டு பேர் மேலேயும் ரிப்போர்ட் போடுறத தவிர வேறு வழியில்லை என்று கராராக சொன்னார். லஞ்சம் கொடுக்க எங்களுக்கு விருப்பமில்லை, இருந்தாலும் அப்போதைக்கு அவரிடம் பணம் இப்ப இல்ல சார், பணத்தை ரெடிபண்ணிட்டு சாரை வந்து பார்க்கிறோம் என்று சொன்னேன். அப்போது, பறக்கும்படை மாவட்ட மேலாளர் திரு.சரவணன் என்னிடம், மொத்த பணம் 7000–த்தையும் நீங்க மட்டும் தனியா வந்து என்னிடம் கொடுங்க என்று சொன்னார். நான் சரி என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். எங்களிடம் 7000 ரூபாய் லஞ்சம் கேட்ட டாஸ்மாக் பறக்கும்படை மாவட்ட மேலாளர் திரு.சரவணன் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இப்படிக்கு (sd) G.Bharathi and (sd) N.Saravanakumar 24.10.2016 Submitted to the Court of the Hon'ble Special Judge for the trial cases of the PC Act-1988, Trichy. Received this report at 13.00 hrs on 24.10.2016 and conducted a Preliminary Enquiry. Registered a case in Trichy V&AC Cr.No.08/2016 u/s 7 of PC Act 1988 at 15.30 hrs on 24.10.2016.(Sd) V.Hemalatha, 24.10.16 (V.Hemalatha) Inspector of Police. V&AC, Trichy.

24/10/16

(V Hemalatha)

ஆய்வாளர்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை

திருச்சிராப்பள்ளி-620 020.